மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்,
கோயம்புத்தூர்

ந.க.எண்:8106/2021/பே.மே

நாள்: 21.06.2021

## பத்திரிக்கைச் செய்தி

உலக பெருந்தொற்று நோயான கொரோனா நோய் (COVID-19) தொற்றினை கட்டுப்படுத்தவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைந்து சிகிச்சை அளிக்கவும் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக கோயம்புத்தூரில் அமைந்துள்ள கோவில்கள், மண்டபங்கள் சமுதாய நலக் கூட்டங்கள், ஓட்டல்கள் மற்றும் விருந்தினர் அரங்கங்களில் நடைபெறும் திருமண நிகழ்விற்கு கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

1. கோயம்புத்தூர் மாவட்டத்தில் அமைந்துள்ள கோவில்கள், திருமண மண்டபங்கள், சமுதாய நலக் கூடங்கள், ஓட்டல்கள், விருந்தினர் அரங்கங்கள் ஆகியவற்றில் பதிவு செய்யப்படும் திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை சம்மந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

2. திருமண மற்றும் சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்பவர்கள் அனைவரும் முக கவசம் அணிய வேண்டும். அனைவரும் கைகளை சுத்தம் செய்ய எதுவாக நுழைவுவாயிலில் கிருமி நாசினி திரவம் வைக்க வேண்டும். அனைவருக்கும் வெப்பமானி சோதனை செய்து பதிவேட்டில் பதிவு மேற் கொண்டு அனுமதிக்க வேண்டும்.

3. வருவாய் வட்டாட்சியரிடம் பதிவு செய்யப்படும் விவரங்களை அடிப்படையாக கொண்டு வருவாய் துறை/மாநகராட்சி/பேரூராட்சி/நகராட்சி/ஊராட்சியைச் சார்ந்த சம்மந்தப்பட்ட அலுவலர்கள் திடீர் தணிக்கை மேற்கொள்வர்கள்.

4. அரசின் பாதுகாப்பு வழிமுறைகளான, முக கவசம் அணிதல், சமூக இடைவெளி பின்பற்றுதல், 50 நபர்களுக்கு மிகாமல் கலந்து கொள்ள வேண்டும்.

5. மேற்காணும் நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா என கள ஆய்வில் பார்க்கப்படும். விதிகளை மீறுபவர்கள் மீது பேரிடர் மேலாண்மை சட்டம் 2005 பிரிவு, 51ன் படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒம்/-ஜி.எஸ்.சமீரன்,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
கோயம்புத்தூர்.

பெறுநர்
மக்கள் செய்தி தொடர்பு அலுவலர்,
கோயம்புத்தூர்

//உண்மை நகல்/உத்தரவுப்படி//

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
கோயம்புத்தூர்.